ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1889/30 - 2014 නොවැම්බර් මස 19 වැනි බදාදා - 2014.11.19

*1889/30 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

கேட்டுவிலகல் காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;

அஹமட் லெவ்வை சுபைடீன் என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அப்துல் கரீம் இப்றாலெவ்வை மொகமட் நசீர் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தொன் திலிண இஷான் விக்ரமரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அப்துல் கரீம் இப்றாலெவ்வை மொகமட் நசீர் என்பவர் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

திலிண விக்ரமரத்ன,<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
அட்டாளைச்சேனை பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,<br>
அம்பாறை,<br>
*2014, நவெம்பர் 18.*

*12- 133*

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், கட்டுவன பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*அனுமதிபெறாது மூன்று மாத காலப்பகுதிக்கு சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காமை காரணமாக, கட்டுவன பிரதேச சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*ஜாசிங்கே ரொஸான் கருணாரத்ன என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் கட்டுவன பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஓமல்பகே சந்தன திலக் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது கட்டுவன பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் உடஹ தாசிலிகே தீபால் தர்ஷன சந்த்ரரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஓமல்பகே சந்தன திலக் என்பவர் கட்டுவன பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*தீபால் சந்த்ரரத்ன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கட்டுவன பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாந்தோட்டை,*
*2014, நவெம்பர் 19.*

*12- 134*

---

**உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்**

*10 அ (1) (அ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தல்*

**நாவிதன்வெளி பிரதேச சபை**

*நாவிதன்வெளி பிரதேச சபையின் உறுப்பினரொருவரான திரு. அமரதாஷ ஆனந்த, இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக உள்ளமை இல்லாதொழிந்துள்ளதால் மேற்படி சபையின் அவரது உறுப்பினர் பதவியை அவர் இழந்துள்ளாரென நாவிதன்வெளி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தொன் திலிண இஷான் விக்ரமரத்ன ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 10அ (1) (அ) என்னும் பிரிவின்கீழ் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*திலிண விக்ரமரத்ன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*நாவிதன்வெளி பிரதேச சபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*அம்பாறை,*
*2014, நவெம்பர் 18.*

*12 - 135*

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*